செ.வெ.எண்: 48 நாள்: 30.01.2018

# பத்திரிகைச் செய்தி

கரூர் மாவட்ட ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் **15.02.2018** வியாழக்கிழமை அன்று கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஓய்வூதிய இயக்குநர், சென்னை ஆகியோர்களால் நடத்தப்பட உள்ளது.

எனவே, ஓய்வூதியதாரர்கள் தங்கள் குறைகள் தொடர்பான மனுக்களை **(இரட்டைப் பிரதிகளில்)** கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு **“ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் மனு”** என்று எழுதப்பட்ட உறையில், அஞ்சல் மூலமாகவோ அல்லது கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) அவர்களிடம் நேரிலோ **12.02.2018**ம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம், அல்லது **15.02.2018** அன்று நேரடியாக மனு கொடுக்கலாம் என்று கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.